1981 மார்ச் 28]

மாண்புமிகு திரு. கா காளிமுத்து : இல்லை.

மதுரை--கம்பம்-குமுளி –கோட்டயம்–நெடுஞ்சாலை.

*வினா எண். 534—திரு. ஆர். டி. கோபாலன் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா---

மதுரை, கம்பம், குமுளி, கோட்டயம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மதுரை-கம்பம்-குமுளி-கோட்டயம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படவில்லை. தொண்டி-மதுரை-கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இச்சாலையில் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பகுதி சாலையான மதுரை-தேனி சாலை அடங்கும்.

வேதாரண்யம் பேரூராட்சியின் திட்டங்கள்.

*வினா எண். 535—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) வேதாரண்யம் பேரூராட்சியின் திட்டங்களை நிறைவேற்ற அரசு உதவி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் பேரூராட்சியில் திட்டங்களை நிறைவேற்ற அரசு உதவி கோரி விண்ணப்பம் வரவில்லை. ஆனால் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேதாரண்யம் பேரூராட்சி எல்லைக்குள் 1979 ஆம் ஆண்டில் அதிக மழை வெள்ளம் காரணமாக சாலைகள், மற்றும் தெருக்களின் சேதத்தை சீர் செய்வதற்காக ரூ. 8,36,000மும் கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை சீர் செய்வதற்காக ரூ. 75,000மும் ஆக மொத்தம் ரூ. 9,11,100 நிதி ஒதுக்கீடு கோரி தலைமைப் பொறியாளர், வெள்ள நிவாரணத் திட்டம் அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரால் செயற்